


வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை

அரியூர்

துவக்க விழா

29-10-1965

தந்தி : "கோஸ்பின்"

தொலைபேசி: 862
1101

வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட் (C. 2401)

அரியூர், வேலூர் தாலுக்கா

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ. 60.00 லட்சம்
செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ. 21.11 லட்சம்

நிர்வாகக் குழு

1. திரு. ஆர். ஜீவரத்தினம், எம். எல். ஏ. (தலைவர்)
2. ,, ஏ. ஜே. அருணாசல முதலியார்.
3. ,, பி. பக்தவத்சலு நாயுடு.
4. ,, எம். எஸ். கோபால முதலியார்.
5. டாக்டர் ஹரிஹரன், எல். எம். பி.
6. திரு. லட்சுமிபதி முதலியார்.
7. ,, ஏ. எம். பொன்னுரங்கம், எம். எல். ஏ.
8. திரு. பி. எஸ். ராஜகோபால் நாயுடு, பி. எஸ்ஸி., பி. எல்.
9. ,, எஸ். வி. சடையப்ப முதலியார்
10 ,, கே. வி. சுந்தரவேலு.
11. தொழில் வர்த்தக இயக்குநர், சென்னை.
12. கைத்தறி இயக்குநர், சென்னை.
13. நூற்பாலையின் நிர்வாக இயக்குநர்.

நிறுவப்பட்ட கதிர்கள்	...	12,096
உற்பத்தி செய்யும் நூல்	...	Nf. 34 - 52

டி. எஸ். ராமகிருஷ்ணமராஜா,
நிர்வாக இயக்குநர்

துவக்க விழா

வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட்

அரியூர், வேலூர் தாலுக்கா

---

29 அக்டோபர் 1965



திரு. கே. காமராஜ் அவர்கள்

ஆலையை

துவக்கி வைக்கிறார்



திரு. ஆர். வெங்கடராமன் அவர்கள்

தமிழ்நாடு தொழிலமைச்சர்

விழாவிற்கு

தலைமை வகிக்கிறார்

வாழ்த்துச் செய்திகள்

பாரத ஜனாதிபதி

ராஷ்ட்ரபதி பவன்
புது டெல்லி

வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையின் துவக்க விழாவிற்கு பாரத ஜனாதிபதி அவர்கள் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்.

* * * *

ராஜபவனம், சென்னை

வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையின் துவக்க விழா 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ம் தேதி நடைபெற இருப்பதை அறிய மகிழ்ச்சி அடைகிறேன். ஆலை வெற்றி பெற எனது நல்வாழ்த்துக்கள்.

ஜெய சாமராஜ உடையார்
கவர்னர்

* * * *

செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை

வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை அக்டோபர் மாதம் 29ம் தேதி வேலூர் அருகே துவக்கப்பட இருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். இப்பெரிய திட்டத்தை குறுகிய காலத்தில் நிறைவேற்றியது உண்மையிலேயே போற்றுதற்குரியதாகும். தங்களது அரிய உழைப்பால் இவ்வாலையை உருவாக்கிய அமைப்பாளர்களை நான் பாராட்டுகிறேன். இவ்வாலையின் வெற்றி இம் மாவட்டத்தில், தொழிலதிபர்கள் தனியார் துறையிலும் கூட்டுறவுத் துறையிலும் மேலும் பெரிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு தூண்டுகோலாக அமையும் என நம்புகிறேன்.

ஆலை வெற்றிபெற எனது நல்வாழ்த்துக்கள்.

எம். பக்தவத்சலம்
முதலமைச்சர்

புது டெல்லி

வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை விரைவில் உற்பத்தி துவக்க இருக்கிறது என்பதை அறிய மகிழ்ச்சி அடைகிறேன். மூன்றாம் ஐந்தாண்டு திட்டத்தில் சென்னை அரசாங்கம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு கூட்டுறவு நூற்பாலையை நிறுவ முடிவு செய்தது. இவ்வாலை அவைகளில் ஒன்றாகும். இந்த ஆலைகளை நிறுவியதனால் தமிழக மக்களுக்கு வேலை வாய்ப்பு வசதி அதிகமாகி, அவர்களது சுபிட்சத்திற்கும் வழிவகை ஏற்படுகிறது.

வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை வெற்றி பெற எனது நல்வாழ்த்துக்கள்.

கே. காமராஜ்

* * * *

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை

மூன்றாம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் நிறுவப்பட்டு வரும் ஒன்பது கூட்டுறவு நூற்பாலைகளில் ஒன்றான, வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, அக்டோபர் மாதம் 29-ம் தேதி துவக்கப்பட இருப்பதை அறிய மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இம்மாவட்டம் மக்கட் தொகை, நிலப்பரப்பு ஆகியவற்றிற்கு ஏற்ற அளவு, இதுவரையிலும், தொழில் அபிவிருத்தி அடையாமல் இருந்து வருகிறது. எனவே ஒரு நூற்பாலையை, விசேஷமாக கூட்டுறவுத்துறையில் அமைத்தது இம்மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

இம் மாபெரும் திட்டத்தை 16 மாத குறுகிய காலத்திற்குள் நிறைவேற்றியது கூட்டுறவாளர்கள் மற்றும் அதிகாரிகளின் போற்றுதற்குரிய பெரும் சாதனையாகும். இந்த ஆலையின் அமைப்பாளர்கள் காண்பித்த ஆர்வத்தாலும் உழைப்பாலும் தான் இதனைச் சாதிக்க முடிந்தது. திட்ட வேலையைத் திறமையுடனும் உறுதியுடனும் நிறைவேற்றியது, இம் மாநிலத்தின் தொழிற் வளர்ச்சிக்கு மேலும் பல திட்டங்களைத் தீட்டுவதற்கான தன்னம்பிக்கையை அளிக்கும் என திடமாக நம்புகிறேன்.

இந்த நற்பணியைச் செய்து முடித்த நிர்வாக குழுவினரையும், கைத்தறி இயக்குநரையும், அவரைச் சார்ந்த அதிகாரிகளையும் பாராட்டி இப்புதிய ஆலைக்கு என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆர். வெங்கடராமன்
தொழில் அமைச்சர்

* * * *

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை

நமது மதிப்பிற்குரிய அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களால் வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையின் துவக்க விழா 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ம் தேதி நடைபெறுவதற்கு என் இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.

கூட்டுறவு நூற்பாலைகளை நிறுவியது கூட்டுறவு இயக்க வளர்ச்சியிலும், கைத்தறித் தொழில் முன்னேற்றத்திலும் ஒரு பெரும் சாதனையாகும்.

நாட்டின் அமைதிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும், மக்களின் சுபிட்சத்திற்காகவும் இந்த ஆலை மென்மேலும் வளர வேண்டுமென நான் வாழ்த்துகிறேன்.

விழா சிறப்புற நடக்கவும் வாழ்த்துகிறேன்.

பி. கக்கன்
உள்துறை அமைச்சர்

* * * *

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை

வேலூர் அருகே ஒரு கூட்டுறவு நூற்பாலையை துவக்குவது வட ஆற்காடு மாவட்ட வளர்ச்சியிலும் கூட்டுறவு இயக்கத்திலும் குறிப்பிடத்தக்க ஒரு பெரும் சாதனையாகும். இந்த தருணத்தில் ஆலைக்கும் அதன் அமைப்பாளர்களுக்கும் எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என். எஸ். எஸ். மன்றுடியார்
கூட்டுறவுத் துறை அமைச்சர்

* * * *

ஸ்தல ஆட்சி அமைச்சர்

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை

நமது மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூட்டுறவு நூற்பாலையை அமைக்க அரசாங்கம் எடுத்த முடிவையும், அவ்விதமான ஆலையொன்று வேலூரில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. காமராஜ் அவர்களால் இம்மாதம் 29ம் தேதி துவக்கப்பட இருப்பதையும் அறிய, ஸ்தல ஸ்தாபன அமைச்சர் திரு. எஸ். எம். ஏ. மஜீத் அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார். இந்த விழா வெற்றிகரமாக நடைபெற வாழ்த்துக்கள்.

(மற்ற வாழ்த்துச் செய்திகள் இறுதிப் பக்கத்தில்)



திரு. ஆர். ஜீவரத்தினம், எம்.எல்.ஏ.
(நிர்வாகக்குழு தலைவர்)

அறிக்கை

வட ஆற்காடு மாவட்டத்தில் கைத்தறிகள் :

வட ஆற்காடு மாவட்டத்தில் ஆரணியிலும், வாலாஜாப் பேட்டையிலும் நெசவு செய்யப்படும் மிக நேர்த்தியான பட்டுத் துணிகளும், குடியாத்தம், ஆற்காடு போன்ற நகரங்களில் உற்பத்தியாகும் தரமுள்ள "வண்ணமாறும் கைத்தறித் துணிகளும்", "மதராஸ் கைக்குட்டைகளும்" இம் மாவட்டக் கைத்தறி நெசவாளருக்கு பெரும் புகழைத் தேடித் தந்திருக்கின்றன. இம் மாவட்டத்தில் பட்டாடை நெய்யும் 4,000 கைத்தறிகளும், பருத்தி நூலாடை நெய்யும் 45,000 கைத்தறிகளும் உள்ளன. ஆண்டு ஒன்றுக்கு இக் கைத்தறிகள் 4 கோடி கெஜம் துணிகளை உற்பத்தி செய்து 1½-லட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கின்றன. இங்கே உற்பத்தியாகும் துணிகளில் பாதியளவு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி ஆவதினால் மிகவும் அத்யாவசியமான அந்நிய செலாவணி நான்கு கோடி ருபாய் ஆண்டுதோறும் கிடைக்கிறது. "மதராஸ் கைக்குட்டைகள்" ஆப்பிரிக்க நாடுகளுக்கும், "ப்ளீடிங் மதராஸ்" துணிகள் அமெரிக்காவிற்கும் ஏற்றுமதி ஆகின்றன. இந்த மாவட்டத்தில் 101 கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றின்கீழ் ஏறக்குறைய 20,000 கைத்தறிகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

கூட்டுறவு நூற்பாலைகள் :

கிராமப்புறத்தைத் தொழில் மயமாக்கவும், கைத்தறித் தொழிலுக்குத் தேவைப்படும் தரமான நூல் நியாய விலையில்


கிடைக்க வழி செய்யவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் நூற் பாலைகளை நிறுவுவதற்கு அரசாங்கம் ஆதரவு அளித்து வரு கிறது. வட ஆற்காடு மாவட்டம் மக்கட் தொகைக்கும் நிலப் பரப்பிற்கும் ஏற்ற அளவு தொழில் வளம் அடையவில்லை. எனவே ஒரு நூற்பாலையை இம் மாவட்டத்தில் நிறுவ முடிவு செய்யப்பட்டது. தற்போது இரு நூற்பாலைகள்தான் இம் மாவட்டத்தில் இயங்கிவருகின்றன. மேலும் ஒரு ஆலையை, அதுவும் கூட்டுறவுத் துறையில், அமைத்தது வரவேற்கப்பட வேண்டியதாகும்.

நூற்பாலை லைசென்ஸ் பெற்று சங்கம் அமைத்தல் :

இந்த மாவட்டத்தில் பல பொது ஸ்தாபனங்களை நிறுவிப் பணியாற்றி வரும் திரு ஆர். ஜீவரத்தினம், எம். எல். ஏ., அவர்கள் இந்த கூட்டுறவு நூற்பாலையின் தலைமை அமைப் பாளராக பொறுப்பேற்க முன் வந்தார்கள். பருத்தி நூல், செயற்கைப் பஞ்சு நூல் இவற்றை உற்பத்தி செய்ய 12,000 கதிர்களைக் கொண்ட ஒரு கூட்டுறவு நூற்பாலையை அமைப்ப தற்கான லைசென்சை மத்திய அரசாங்கம் 1962-ம் ஆண்டு டிசம்பர் 21-ந்தேதி இவருக்கு அளித்தது. இந்த நூற்பாலை ஒரு கூட்டுறவு சங்கமாக 1963-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ந் தேதி பதிவு செய்யப்பட்டது. நூற்பாலைக்கு வேண் டிய பங்குத் தொகையைச் சேர்ப்பதற்கும், மற்றும் துவக்கப் பணிகளைக் கவனிப்பதற்கும் திரு ஆர். ஜீவரத்தினம், எம். எல். ஏ., அவர்களைத் தலைவராகவும் திரு ஏ. எம். பொன்னுரங்கம், எம். எல். ஏ., கைத்தறி இயக்குநர் ஆகி யோரை உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு இடைக்காலக் குழு அமைக்கப்பட்டது.


நிர்வாகக் குழு :

இந்த நூற்பாலை இப்பொழுது சர்க்காரால் நியமனம் செய்யப்பட்ட ஒரு நிர்வாகக்குழுவால் நிர்வகிக்கப்பட்டு



திரு. ஐ. மகாதேவன், ஐ.ஏ.எஸ்.
(கைத்தறி இயக்குநர்)

2365



புளோ ரூம் இயந்திரம்

வருகிறது. திரு ஆர். ஜீவரத்தினம், எம். எல். ஏ., அவர்கள் இந்த நிர்வாகக் குழுவின் தலைவர். நிர்வாகக் குழுவில் கீழ்க்கண்ட மற்ற அங்கத்தினர்களும் பணிபுரிகின்றனர் :—

1. திரு ஏ. ஜே. அருணாசல முதலியார்.
2. ,, பி. பக்தவத்சலு நாயுடு.
3 ,, எம். எஸ். கோபால முதலியார்.
4. டாக்டர் ஹரிஹரன், எல் எம். பி ,
5. திரு லட்சுமிபதி முதலியார்.
6 ,, ஏ. எம். பொன்னுரங்கம், எம். எல். ஏ.,
7. ,, பி. எஸ் இராஜகோபால் நாயுடு, பி. எஸ்ஸி., பி எல்.
8. ,, எஸ். சி. சடையப்ப முதலியார்.
9. ,, கே. வி. சுந்தரவேலு.
10. தொழில் வர்த்தக இயக்குநர், சென்னை.
11. கைத்தறி இயக்குநர், சென்னை.
12. நூற்பாலையின் நிர்வாக இயக்குநர்.

நிர்வாகத் துறை :

பங்குத் தொகை சேர்க்கவும் மற்ற பூர்வாங்க வேலைகளைக் கவனிக்கவும், ஆரம்ப காலத்தில் கூட்டுறவுத் துணைப் பதிவாளர்கள் திரு. ஏ. நடராஜன் அவர்களும், பின்னர் திரு பி. டி. நாகப்ப அப்பா அவர்களும் நியமிக்கப்பட்டனர். 1964-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் தொழில் துறையைச் சேர்ந்த திரு. டி. எஸ். இராமகிருஷ்ணமராஜா அவர்கள் ஆலையின் நிர்வாக இயக்குநராக நியமனம் செய்யப்பட்டார். கட்டிட வேலைகளை முடிப்பதற்கு துணைப் பொறியாளர் திரு


ஏ. ஆர். இராமச்சந்திரன் அவர்கள் பொறுப்பேற்று உதவி ஞர். இயந்திரங்களை நிறுவிய பொறுப்பு தொழிற்சாலை மேலாளர் திரு எம். நாகராஜன் அவர்களைச் சார்ந்ததாகும்.

அங்கத்தினரும் பங்குத் தொகையும்:


ஆலையின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 60 லட்ச மாகும். இது பங்கு ஒன்றுக்கு ரூ. 100 விதம் 60,000 பங்கு களைக் கொண்டது. 1965-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் தேதி வரை செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 21.11 லட்சமாகும். தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் சங்கமும், இந்த மாவட்டத் திலுள்ள 47 பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் சுமார் 1-லட்சம் ரூபாய் பங்குத் தொகை செலுத்தியுள்ளன. 87 இதர கூட்டுறவு சங்கங்கள் ரூ. 1·62 லட்ச அளவிற்கு பங்குகள் எடுத்துள்ளன. மேலும் 454 தனி நபர்கள் ரூ. 3·76 லட்சம் செலுத்தி கணிசமான அளவிற்குப் பங்குகள் எடுத்துள்ளனர் என்பது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும். மாநில அரசாங்கம் செலுத்தியுள்ள பங்குத் தொகை ரூ. 14 லட்ச மாகும். பங்குத் தொகையில் பெரும்பகுதி எடுத்துக்கொண்ட தமிழ்நாடு அரசினர்க்கு ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இந்த ஆலையின் நிர்வாகக் குழுவினர் பெரிதும் கட மைப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்திலுள்ள பொது மக்களிட மிருந்து, சலியாத உழைப்பால் கணிசமான பங்குத் தொகை யைச் சேகரித்துக் கொடுத்த திரு. ஆர். ஜீவரத்தினம், எம். எல். ஏ., அவர்களுக்கும் நன்றி சொல்ல ஆலையின் நிர்வாகத்தினர் கடமைப்பட்டுள்ளனர்.

நிதி:

இவ்வாலையின் மூலதனச் செலவினம் ரூ. 55·61 லட்ச மாகும். மேற்குறிப்பிட்டுள்ள மூலதனச் செலவின் விபரமும் அதற்குரிய நிதி வசதியும் பின்வருமாறு:



கார்டிங் டிபார்ட்மெண்ட்



டிராயிங் பிரேம்ஸ்

மூலதனச் செலவு	(ரூ. லட்சத்தில்)	நிதி வசதி	(ரூ. லட்சத்தில்)
(1) நிலம்	1.36	(1) செலுத்தப்பட்ட மூலதனம்	21.11
(2) கட்டிடங்கள்	12.62	(2) தொழில் முன்னேற்ற பேங்கு சென்னை மாநில கூட்டுறவு வங்கிமூலம் அளிக்கும் கடன்	30.00
(3) இயந்திர சாதனங்கள்	39.07	(3) இயந்திரங்களை வாங்குவதில் ஜப்பான் தரும் பத்தாண்டு கடன் வசதி	4.50
(4) பலவகை உடைமைகள்	2.56		
மொத்தம்	55.61	மொத்தம்	55.61

இந்திய தொழில் அபிவிருத்தி பேங்கிற்கும் சென்னை மாநில கூட்டுறவு பேங்கிற்கும் ரூ. 30 லட்சம் நீண்ட காலக் கடனாகக் கொடுத்ததிற்கு இவ்வாலையின் நிர்வாகக் குழு இத் தருணத்தில் நன்றி சொல்ல விழைகிறது. ஆரம்ப காலத்திற்கு நடைமுறை மூலதனக் கடனாக ரூ. 2. லட்சம் அளித்த வேலூர் மத்திய கூட்டுறவு பேங்கிற்கும் இவ்வாலையின் நன்றி உரித்தாகும்.

நூற்பாலைக்கான இடம் :

நூற்பு ஆலைக்கு வேண்டிய மனை வாங்குவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க மாவட்டக் கலெக்டரின் கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டது இதில் நூற்பாலை அமைப்பாளரான திரு. ஆர். ஜீவரத்தினம், எம். எல். ஏ., கைத்தறி இயக்குநர், வேலூர் மின்சார வசதி இலாகா கண்காணிப்பு பொறியாளர்,


பொதுத்துறை இலாகா நிர்வாகப் பொறியாளர் மற்றும் மாவட்ட சுகாதார அதிகாரி ஆகியோர் அங்கம் வகித்தனர். வேலூரிலிருந்து 5 மைல் தொலைவில் உள்ள அரியூர் என்ற கிராமத்தில் சுமார் 49·52 ஏக்கரா நிலத்தில் ஆலையை அமைக்க இந்த குழு சிபார்சு செய்தது. நிலத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை நில ஆர்ஜித சட்டத்தின் கீழ் துரிதமாக எடுத்துக்கொண்ட மாவட்ட கலெக்டருக்கு இவ்வாலையின் நிர்வாகக் குழு நன்றி கூற விழைகிறது.

கட்டிட வேலைகள்:


ஆலையின் கட்டிடக் கலைஞராக சென்னையிலுள்ள சித்தலே ஸ்தாபனத்தார் நியமிக்கப்பட்டனர். கட்டிட வேலையை மேற்பார்வை செய்வதற்காக ஒரு துணைப் பொறியாளரையும் ஒரு இள நிலைப் பொறியாளரையும் கொண்ட ஒரு எஞ்ஜினியரிங் சப் டிவிஷனின் சேவையை அரசாங்கம் ஆலைக்காக அளித்தனர். கட்டிட வேலைப்பாட்டை திரு டி. பி. சீனிவாசன் அவர்களிடம் காண்டிராக்ட் மூலம் ஒப்படைக்கப்பட்டது. ஆலைக்குப் பிரதானமான தொழிற்கூடம், அலுவலகம், மற்றும் பருத்திக் கிடங்கு ஆகியவை கட்டிட வேலைப்பாடுகளில் சேர்ந்தவை. ஆலை அலுவலர்கள் தங்குவதற்கான வீடுகள், சிற்றுண்டி விடுதி போன்ற மற்ற கட்டிட வேலைகள் பின்னர் தனியாக எடுத்துக் கொள்ளப்படும்.

இயந்திர சாதனங்கள்:

அரசினரால் அமைக்கப்பட்ட தொழில் நுட்பக் குழுவின் சிபார்சின் பேரில், இந்த ஆலைக்கு வேண்டிய முக்கிய இயந்திரங்களான பஞ்சை சுத்தம் செய்யும் இயந்திரம் (Blowroom line), இதுசம்பந்தப்பட்ட மற்ற உபகரணங்களும் (Preparatory Machinery) ஜப்பானிலுள்ள ஹோவா மெஷினரி கம்பெனியிடமிருந்து (Howa Machinery Limited, Japan) 10 வருடக் கடன் வசதியில் இறக்குமதி செய்யப்பட்



ஸ்பீட் பிரேம்ஸ்



நூற்கும் கதிர்கள்

டன. இன்னும் சில இயந்திர சாதனங்கள் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. உள்நாட்டில் உற்பத்தி செய்த கார்டிங் எஞ்சின்கள் M. M. C. கம்பெனியிடமிருந்தும் நூற்கும் கதிர்கள் டெக்ஸ்மாக்கோ (Texmaco) கம்பெனியிடமிருந்தும் வாங்கப்பட்டுள்ளன. ஆலையில் நிறுவியுள்ள இயந்திரங்களின் பெரும் பகுதி உள்நாட்டிலேயே உற்பத்தியானதென்பது குறிப்பிடத்தக்கது.

மின்சார வசதியும் தட்ப நிலை அமைப்பும் :

மின்சார சாதனங்களைத் தயார் செய்து ஆலையில் நிறுவும் முழுப் பொறுப்பையும் ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி ஏற்றுக்கொண்டது. தரமான உயர்ரக நூலை உற்பத்தி செய்வதற்காக தட்ப நிலை சாதனங்கள் வோல்டாஸ் கம்பெனியால் ஆலையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

உற்பத்தியாகும் நூல் ரகங்கள் :

வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் கைத்தறித் துணிகளாகிய லுங்கிகள், மதராஸ் கைக்குட்டைகள், வண்ண மாறும் துணிகள் ஆகிய ரகங்களை நெய்யத் தேவையான நூல் ரகங்களை (Nf 34 முதல் Nf 52 வரை) உற்பத்தி செய்வதில் இந்த ஆலை விசேஷ கவனம் செலுத்தும். உள்நாட்டில் விளையும் கம்போடியா, உகாண்டா பருத்தி ரகங்களைப் பெரும்பாலும் கூட்டுறவு சங்கங்களின் மூலம் கொள்முதல் செய்யப்படும்.

உற்பத்தித் துவக்கம் :

மிகக் குறுகிய காலத்தில் இந்த ஆலையை நிறுவியது நிர்வாகக் குழுவினரின் பெருமைக்குரிய விஷயமாகும். 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ந்தேதி முதலமைச்சரால் இந்த ஆலையின் அடிக்கல் நாட்டப்பட்டது. இவ்விழா தொழி


லமைச்சர் தலைமையில் நடந்தது. 1964-ம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் எல்லா பூர்வாங்க வேலைகளும் முடிக்கப்பட்டன. ஆலையின் கட்டிட வேலை 1964-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் துவக்கப்பட்டது. எல்லா கட்டிட வேலைப்பாடும், 6,000 கதிர்கள் இயங்குவதற்கு வேண்டிய இயந்திர நிறுவனமும் 15 மாதங்களுக்குள் முடிக்கப்பட்டு, 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாந் தேதி நூல் உற்பத்தியும் பரீட்சார்த்த முறையில் துவக்கப்பட்டது. மேலும், 6,000 கதிர்களை நிறுவும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. இவையும் இவ்வருட இறுதிக்குள் இயங்கத்துவங்கிவிடும்.

எதிர் காலத் திட்டங்கள் :


மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் (அதாவது மார்ச் 1966-க்கு முன்னதாக) 12,000 கதிர்களும் மூன்று ஷிப்டுகளில் இயங்கும். நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆலையின் இயங்கும் சக்தி 25,000 கதிர்களாக விஸ்தரிக்கப்படும்.

நன்றி கூறல் :

நமது ஒப்பற்ற தலைவர் திரு காமராஜ் அவர்கள், தொழிலமைச்சர் முன்னிலையில் இந்த ஆலையைத் துவக்கும் இந் நன்னளில், ஆலையின் நிர்வாகத்தினர்களும் அங்கத்தினர்களும் தொழில் வளத்தின் மூலமும், ஏற்றுமதியைப் பெருக்குவதின் மூலமும் தங்கள் சேவையை நாட்டிற்கு அர்ப்பணிக்கின்றனர். இந்த ஆலை மிக உயர்தரமான நூலை உற்பத்தி செய்து அதை நேர்முகமாக இம்மாவட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் வழங்குவதற்கு உறுதி பூண்டுள்ளது. இந்நன்னளில் மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும், மத்திய தொழிலக அமைச்சுக்கும் ஜவுளிக் கமிஷனருக்கும், இந்திய தொழில் முன்னேற்ற பேங்கிற்கும், சென்னை மாநில கூட்டுறவு பேங்கிற்கும், தமிழ்



ரீலிங் செக்ஷன்



பேலிங் பிரஸ்


நாடு கூட்டுறவு நெசவாளர் சங்கத்திற்கும், வேலூர் மத்திய கூட்டுறவு பேங்கிற்கும் அவர்களது உறு துணைக்காகவும் நிதி வசதி செய்ததற்காகவும் நன்றி கூற இந்த நூற்பாலை கடமைப்பட்டுள்ளது.

ஆலையைக் கட்டி முடிப்பதற்கான வேலைகளில் ஒவ்வொரு கட்டத்திலும் உதவி செய்து வழிகாட்டிய மாநில தொழில், தொழிலாளர் கூட்டுறவு துறை காரியதரிசிக்கும், மாநில கூட்டுறவு பதிவாளருக்கும், கைத்தறி இயக்குநருக்கும் இவ்வாலையினர் நன்றிகூற பெருமைப்படுகின்றனர். ஆலையைக் கட்டி முடிக்க கடமை உணர்வுடன் அயராது உழைத்த நிர்வாக இயக்குநர் திரு டி. எஸ். இராமகிருஷ்ணமராஜா அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்த ஆலையின் மற்ற அலுவலர்களுக்கும் இவ்வாலையின் நிர்வாகத்தினர் தம் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

தொழில் அமைச்சர் தலைமையில் நமது தலைவர் திரு காமராஜ் அவர்களால் இன்று துவக்கி வைக்கப்படும் இந்த ஆலை அவர்களது ஆசி பெற்று மென்மேலும் பெருகி வளரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அரியூர்,
29—10—1965

நிர்வாகக் குழுவினர்.



ஆலையின் நிர்வாக இயக்குநரும் அலுவலர்களும்

வாழ்த்துச் செய்திகள்

செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை

வட ஆற்காடு மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள கூட்டுறவு நூற்பாலையின் துவக்க விழா நமது ஒப்பற்ற அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு கே. காமராஜ் அவர்களால் விரைவில் நடைபெற இருப்பதை அறிய மகிழ்ச்சி அடைகிறேன். திறப்பு விழா சிறப்புடன் நடக்க வாழ்த்துகிறேன். ஆலை மென்மேலும் பெருகி வளரவும் பிரார்த்திக்கிறேன்.

ஜி. பூவராகன்

செய்தி, விளம்பரத்துறை அமைச்சர்

புது டெல்லி

வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை காங்கிரஸ் கட்சி தலைவர் திரு. கே. காமராஜ் அவர்களால் வேலூரில். 1965-ம் ஆண்டு, அக்டோபர் மாதம் 29-ந் தேதி துவக்கப்பட இருப்பதை அறிய மகிழ்ச்சி அடைகிறேன். இத்துவக்க விழாவிற்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்து, ஆலை வெற்றி பெறவும் வாழ்த்துகிறேன்.

ஒ. வி. அளகேசன்

பெட்ரோலியம், ரசாயனப் பொருட்கள் துறை அமைச்சர்

புது டெல்லி

மூன்றும் ஐந்தாண்டு திட்ட முயற்சிகளில் ஒன்றுக வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு நூற்பாலையை சென்னை அரசாங்கம் நிறுவியது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆலை எல்லா வெற்றிகளையும் அடைய முன்னதாக வாழ்த்துகிறேன்.

மேலும் பல திட்டங்களை வட ஆற்காடு மாவட்டத்தில் நிறைவேற்றுவதற்கான முன்னோடியாக இந்த ஆலை அமைய விரும்புகிறேன்.

சி. ஆர். பட்டாபிராமன்

செய்தி ஒலி பரப்புத் துறை, துணை அமைச்சர்


பம்பாய்

சென்னை மாநிலத்தில் மேலும் ஒரு கூட்டுறவு நூற்பாலை அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராஜ் அவர்களால் இம்மாதம் 29-ஆம் தேதி துவக்கப்பட இருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு வாரத்திற்கு முன்னர் தான் மாயூரத்தில் ஒரு கூட்டுறவு நூற்பாலையை முதலமைச்சர் துவக்கி வைத்தார். கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காக அரசாங்கம் எடுத்துக் கொண்ட மிகப் பெரிய முயற்சிகளில் ஒன்றுதான் நமது நாட்டில் கைத்தறிகள் நிறைந்துள்ள பல்வேறு இடங்களில் கூட்டுறவு நூற்பாலைகளை நிறுவிவருவது. உள் நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதோடுமட்டுமல்லாமல், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலும், நான்காம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் கைத்தறித் தொழிலுக்கு முக்கியத்துவம் இருக்கும். தற்போது கைத்தறித் துணி ஏற்றுமதியில் நல்ல அபிவிருத்தி காணப்பட்டுவருகிறது. “பிளீடிங் மெட்ராஸ்” என்ற வண்ண மாறும் கைத்தறித் துணி போன்ற துணிகளுக்கு அயல் நாடுகளில் நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. இம் மாதிரியான கூட்டுறவு நூற்பாலைகளினால் தரமான நூல் நியாய விலையில் கிடைக்க வகை ஏற்பட்டு, கைத்தறித்துணி ஏற்றுமதி அபிவிருத்தி ஆகும் என எதிர்பார்க்கலாம். கைத்தறித் தொழிலில் ஈடுபட்டோர்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு இந்த ஆலை சிறப்பாக செயல்படும் என நம்புகிறேன்.

ஆர். துரைசாமி

ஜவுளிக் கமிஷனர்

தமிழ் நாட்டுக் கூட்டுறவு நூற்பாலைகள்



PRINTED AT THE JUPITER PRESS PRIVATE LTD., MADRAS-18.

